*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 2, issue 1, pp. 285- 288, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# வலங்கைமாலை ஓலைச்சுவடிகள் காட்டும் சோழர் வரலாறு

**செய்யது இப்ராகிம் ம**
*கௌரவ விரிவுரையாளர், வரலாற்று துறை, அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி, இராமநாதபுரம்*
*Email id: Syedibrahim2776@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ் சமூகத்தின் வரலாற்று ரீதியான ஆய்வுகள் அண்மை காலங்களில் தொல்லியல், கல்வெட்டியல் போன்ற ஆய்வின் மீது கவனம் செலுத்துவதை காண முடிகிறது. பல நாட்டுப்புற பாடல்கள் வட்டாரத் தரவுகள் இதற்கு பயன்படுத்தப்படுகிறது. தமிழக சான்றோர்கள் ஓலைச்சுவடிகளில் பல அற்புதமான கருத்துக்களை வருங்கால சமூகத்திற்கு பயனுள்ள வகையில் பதிவு செய்து இருக்கிறார்கள். ஓலைச்சுவடுகளின் பல தரவுகளை வரலாற்று ஆய்வாளர்கள் வெளிக்கொணர்வதன் மூலமாக இந்த சமூகத்திற்கு பல பயனுள்ள வரலாற்று தரவுகளையும் தமிழ் சமூகத்தின் வரலாற்று பெருமைகளையும் சுட்டிக்காட்ட முடியும். பாறைகளில் எழுதி வந்த தமிழர்கள் பிற்காலத்தில் பனையோலையைப் பயன்படுத்தத் தொடங்கினர். எழுதுதாள் கண்டுபிடிக்கப்பட்ட காலம் வரை பனையோலையில் எழுதுகின்ற முறை ஆசிய நாடுகள் அனைத்திலும் இருந்திருக்கிறது. இவ்வாறு எழுதப்பட்ட அனைத்தும் எழுத்தோலைகள் எனப்படுகின்றன. நூலாக எழுதப்பட்ட ஓலைகள் கட்டித் தொகுக்கப்பட்டன. இவற்றைப் பொத்தகம் என்றும், பொத்தகக் கவளி என்றும் வழங்குவர். எழுத்தும் ஓலையும் இணைந்த எழுத்தோலையையும், ஓலைக் கணக்கரையும் அவர் காலை முதலாக மாலை ஈறாகக் கணக்கெழுதும் காட்சியை நாலடியார் தெரிவிக்கிறது.*

## சுவடி படைக்கும் தொழில்

*தமிழ்நாட்டு வரலாற்று ஆய்வுக்கு உதவக்கூடிய பல ஓலைச்சுவடிகள் காலப்போக்கில் அளிக்கப்படும் மறைக்கப்பட்டும் வந்திருக்கின்றன தமிழர்கள் வரலாற்றில் ஓலைச்சுவடிகளை எழுதி பாதுகாக்கும் பணி பல மன்னர்களின் முன்னெடுப்பில் செய்யப்பட்டு இருப்பதை வரலாறு நமக்கு சுட்டிக்காட்டுகிறது. அந்த வகையில் இளம்பதமுள்ள பனையோலையைப் பொறுக்கி எடுப்பர். அளவுக்குத் தக்கவாறு நறுக்குவர். குழந்தைக்கு நகம் வெட்டுவது போல் நளினமாக அதன் நரம்பைக் களைவர். நிழலில் உலர்த்துவர். பனியில் பதப்படுத்துவர். இளக்கமுறுமாறு இளஞ்சூட்டு வெந்நீரில் வெதுப்புவர். பளபளப்பான சங்கு அல்லது கல்லைக் கையில் வைத்துக்கொண்டு ஓலையை அழுத்தி அழுத்தித் தேய்த்து அழகுபடுத்துவர். பக்குவமாகப் பாடம் செய்வர். (பாடம் செய்வது என்பது ஓலைகளை அடுக்கிக் கட்டி முறுக்காமல் இருக்கச் செய்தல்.) மஞ்சள் நீரிலோ, அரிசிக் கஞ்சியிலோ ஊறவைப்பர். சுவடிக் கட்டில் இரண்டு இடத்தில் சுள்ளாணியால் துளை போடுவர். ஒரு முனையில் ஒரு துளையில் கயிறு கோத்து ஒலையைப் பிரித்துப் புரட்டுமாறு தளர்வாகக் கட்டிக்கொள்வர். ஒவ்வொரு ஓலைமீதும் மஞ்சளையும் வேப்பெண்ணெயையும் கலந்து பூசுவர். கோவை இலை, ஊமத்தை இலை அகியவற்றின் சாறுகளைப் பூசுவர். மாவிலை, அறுகம்புல் ஆகியவற்றை எரித்த கரியை மையாகத் தடவுவர். இதன் மேல்தான் எழுத்தாணி கொண்டு எழுதுவர். ஓலையின் மறுமுனைத் துளையிலும் கயிறு கோத்துப் பொத்தகமாகக் கட்டுவர்.*

தமிழர் பண்பாட்டில் பல சித்த மருத்துவம் தொடர்பான பல குறிப்புகள் ஓலைச்சுவடிகளிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது தமிழ்நாட்டில் கிடைத்திருக்கக்கூடிய 60 சதவீதமான ஓலைச்சுவடிகளில் வெறும் 25% ஓலைச்சுவடிகள்மருத்துவம் மரபு வழி பாரம்பரியம் போன்றவற்றை குறிப்பிடக் கூடியதாக இருக்கிறது அதில் வெகு சில மட்டுமே வரலாற்று பூர்வமான தகவல்களை நமக்கு தரக்கூடியதாக அமைந்திருக்கிறது. எஞ்சியவற்றுள் 25 விழுக்காடு கலை, இலக்கியம், சமயம், வரலாறு தொடர்பானவை. ஏனையவை சோதிடம், மாந்திரீகம், போன்ற நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் சார்ந்தன என்று கணக்கிடப்பட்டுள்ளன. இவற்றில் கட்டிடக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை தொடர்பான சுவடிகள் மிகவும் குறைவான எண்ணிக்கையில் கிடைக்கின்றன. ஆனால், ஓவியம் தொடர்பான இலக்கியம் கிடைக்கவில்லை.

**வலங்கைமாலை**

வலங்கைமாலை என்பது ஒரு வில்லுப்பாட்டு பாடும் தகவல்களை தரக்கூடிய வலங்கை உயங்கொண்டார்கள் சமூகத்தின் வரலாற்றை பற்றி குறிப்பிடும் ஓலைக்சுவடிகள் ஆகும். இது சோழர்களின் ஆட்சி காலத்தில் கிபி 1018 முதல் 1300 வரை நடைபெற்ற பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை பற்றிய செய்திகளை தந்திருக்கிறது. இது தோழர்களின் வீழ்ச்சி எழுச்சி போன்றவற்றை வில்லுப்பாட்டு வடிவில் விவரித்து சொல்கிறது தென்பாண்டி நாட்டில் சான்றார் சமூகத்தவர் அதிக அளவில் நெருங்கி வாழும் சில பகுதிகள் இதனை வில்லுப்பாட்டாக பாடும் வழக்கம் கிபி இருபதாம் நூற்றாண்டு இறுதிவரை நிலவி வந்துள்ளது. சான்றார் சமூகத்தவருக்கு உரிய குலதெய்வமாக குடும்ப ஊர் கோவில்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் கொடை விழாவில் இப்பாடலை பரம்பரை பரம்பரையாக பாடி வருகிறார்கள் இந்த வில்லு இசை பாட்டு புலவர்கள் பரம்பரையீரின் தலைமுறைகளாக தேர்வு செய்யப்பட்டு தற்போதும் அவர்களின் மரபு வழி பெருமைகளை அந்தப் பாடலின் மூலமாக வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் எழுதியதாக கருதப்படும் ஏரெழுவது, சிலை எழுபது, ஒட்டக்கூத்தர் எழுதியதாக கருதப்படும் ஈட்டி எழுபது போன்ற நூல்கள் வேளாளர் மற்றும் செங்குந்தர் குலத்தவரின் பெருமையை பேசுகின்றன. இந் நூல்களும் கூட பழைய புலவர்கள் மேல் ஏற்றி கூறப்பட்ட பிற்கால நூல்களாகவே இருக்க முடியும். இப்படிப்பட்ட இலக்கியங்களை விட வலங்கை மாலை ஒரு ஆவணமாக கொள்ளத்தக்க அளவிற்கு வரலாற்று செய்திகளை உள்ளடக்கியது அந்த வகையில் வில்லுப்பாட்டு நூலுடன் ஒப்பிடத்தக்க ஒரு இலக்கியம் இருப்பதாக தெரியவில்லை நம்பி என்பவரால் இயற்றப்பட்ட வீரனுக்கு விஜயம் என்ற சோழர்கால இலக்கியத்தையும் கலிங்கத்துபரணையும் ஒப்பிடலாம் வீரனுக்காக விஜயம் தென்னாடு மாவட்டத்தில் உள்ள வீரநாராயணன் வீராணம் ஏரிக்கு நடுவில் கோட்டை கட்டி ஆண்ட வல்லாளன் எனப்பட்ட கன்னட அரசனை சோழ அரசனின் சார்பாக கைக்கோளப்படை போரிட்டு வென்ற நிகழ்வினை பாடும் நூலாகும் கலிங்கத்துப்பரணி முதல் குழு தங்கச் சோழனின் படைத்தலைவனாக இருந்த கருணாகரத் தொண்டைமானின் கலிங்க வெற்றியை பாடும் நூலாகும். வீரனுக்கு விஜயத்தில் குறிப்பிட்ட வல்லாளன் கூட அரசனாக கட்சியையும் தஞ்சையையும் கொண்ட கண்ணாரத்தேவனை குறிப்பிடுவதாக இருக்க வாய்ப்புகள் அதிகம். கி.பி பத்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சேர்ந்த வரலாற்று நிகழ்வை குறிப்பிடும் இலக்கியமாக இதனை கொள்ளலாம். கலிங்கத்துப்பரணி முழுமையாக நமக்கு கிடைத்துள்ளது. வீரனுக்காக விஜயம் மூலநூல் கிடைக்கவில்லை ஆயினும் அதனை தழுவி கிபி 16 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வீரநாராயண விஜயம் கிடைத்துள்ளது. வில்லுப்பாட்டு நூலான வலங்கை மாலையில் கிபி 11ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளை குறிப்பிடுகின்றன என்பது தெரிய வருகிறது கிபி 13 ஆம் நூற்றாண்டு வரையில் பல நிகழ்வுகளும் இதில் இடம்பெற்று விட்டது மாலை என்பது ஒரு சிற்றிலக்கிய வகையாகும். பெரும்பாலும் கட்டளை கலித்தொகையில் அல்லது ஆசிரிய விருத்தத்தில் இது அமைகிறது.

**வலங்கைமாலை காட்டும் சோழர் வரலாறு**

இச்சுவடியின் முதல் பகுதியில் கூறப்பட்டுள்ளது. வித்யாதர முனிவர் சோழர் குல வலங்கைசான்றோர் மக்களின் ஆதி மூதாதையர் ஆவார். அவரின் ஏழு புதல்வர்களையும் காளி வளர்த்து வீரக் கலைகளைக் கற்றுக் கொடுத்து ஆளாக்குகிறாள். காளி தான் வளர்த்து ஆளாக்கிய ஏழு புதல்வர்களுக்கும் நிருபதிராசன் மகள்களை மணமுடித்து வைக்கிறாள். எழுவரும் வலங்கை சான்றோர் குலமாக உருவாகின்றனர். வலங்கைச் சான்றோர் சோழனை எதிர்த்த சம்பரனை வெற்றி கொள்கின்றனர். என்ற செய்திகள் இடம் பெற்று இருக்கிறது. சோழ சாம்ராஜ்யத்தின் எல்லைகள் குறுகிக் கொண்டு வந்த பிறகு மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் சோழ வம்சம் பெரும் பின்னடைவை சந்தித்தது. சோழ வம்சம் முடிவுறும் சமயத்தில் குறிப்பாக மூன்றாம் ராஜேந்திரனுக்கு பிறகான சோழ வம்சத்தினரின் வரலாற்றை இந்த ஓலைச்சுவடிகள் வெளிப்படுத்துகிறது. சோழ சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடைந்த பிறகு ஒய்சால மன்னர்கள் ஆட்சியும் தமிழ்நாட்டில் பாண்டிய மன்னர்களின் ஆட்சியும் பெரும் அளவில் நடைபெற்று இருந்த சமயத்தில் சோழர்களும் வாழ்ந்திருப்பது தெரிய வருகிறது. இந்த ஓலைச்சுவடிகள் அத்தகைய செய்திகளை பெரும் அளவில் வெளிப்படுத்துகிறது. சோழ வம்சத்தின் துவக்க கால முதல் சோழ வம்சத்தின் இறுதி காலம் வரையிலான பல வரலாற்றுச் செய்திகளுக்கு இந்த ஓலைச்சுவடிகள் சான்றாக அமைந்திருக்கிறது. வீரசேகரன் காலம் வரையில் இந்த ஓலைச்சுவடிகள் பல குறிப்புகளை தந்திருக்கிறது

வீரசேகர சோழன் (ஆட்சி:1511-1529) பழையாறையிலிருந்து ஆட்சி செய்து வந்த சோழ மன்னனாவான்

**சோழர் குலச் சான்றோர்கள் பூதப்பாண்டி நாட்டில் குடியேறுதல்**

சோழர் குலத்து புலிக்கொடியோன் மக்கள் வள்ளியூர் குலசேகரபாண்டியன் கன்னடியருடன் போர் பூசலில் ஈடுபட்டதால் அவனிடம் உதவி பெற முடியாமல் போனது. எனவே அவர்கள் ஒட்டப்பிடாரம் வீரபாண்டியனிடம் சோழ நாட்டை மீட்க உதவி கேட்டனர். அச்சூழலில் வீரபாண்டியனும் தனதுநாட்டை இழந்தான். இதனால் உதவி கிடைக்காத சோழர் குலச் சான்றோரும் பூதப்பாண்டி நாட்டில் சென்று குடியேறினர்.

**அத்திமுடிச் சோழன் விஜய நகர வேந்தனிடம் உதவி கோருதல்**

கிருஷ்ணதேவராயர் 1529 இல் மரணம் அடைந்த பிறகு கிருஷ்ணதேவராயன் படையில் அத்திமுடிச் சோழன் நாடிழந்ததை எண்ணி வருந்தினான். அப்போது மந்திரி "முகமதியரை விரட்ட விஜயநகர வேந்தன் கிருஷ்ணதேவராயனுக்கு உபதுணையாய் இருந்தீர்கள். எனவே அவரிடம் உதவி கேட்டு நாட்டை மீட்டுக் கொள்ளலாம் "என்று ஆலோசனை கூறுகிறான். அத்தி முடிச் சோழனும் விஜயநகர வேந்தனைக் கண்டு உதவி கேட்கிறான். விஜயநகர வேந்தனும் தனது படைத்தளபதி நாகம நாயக்கன் தலைமையில் ஒரு படையை அனுப்பி சோழர் குல வலங்கை சான்றோனை அடக்கி அத்திமுடிச்சோழன் மகனை மீண்டும் நாடாளச் செய்தான். நாகம நாயக்கன் முதலியார் படையுடன் தொண்டை மண்டலம் நோக்கிச்சென்றான். வலங்கை சான்றோர் குலத்து மண்டல்காட்டு ராசன் புலிக்கொடியோன் நாகம நாயக்கன் படையை எதிர்த்துப் போர் செய்தான். தனது படை வீரர்கள் சிலர் எதிரிப் படையுடன் சேர்ந்து கொண்டனர். நாகம நாயக்கனின் சூழ்ச்சியானபோர் முறையினால் புலிக்கொடியோன் மாண்டான். நாகமநாயக்கன் நாடாண்ட வலங்கை சான்றோர் மக்களிடம் பகுதிப் பணம் கட்டுங்கள் இல்லை எனில் நாட்டை விட்டு வெளியேறுங்கள் என்று கூறினான். நாடாண்ட ராச மன்னர் மக்கள் பகுதிப் பணம் கட்ட மறுத்தனர். மேலும் நமது குடியைச் சேர்ந்த சான்றோர் குல மக்கள் ஏழு பேர் கூன்பாண்டியனுக்குப் பின் ராச்சியத்தை ஆண்டு வருகின்றனர். எனவே அவர்கள் துணையுடன் நம் நாட்டை மீண்டும் மீட்டுக் கொள்ளலாம் என்று ஆலோசித்து தன் பரிவாரங்களுடன் தென்பகுதிக்குக் குடிபெயர்ந்தனர் .

**மார்த்தாண்டவர்மா சோழர் குலச்சான்றோருக்கு செய்த கொடுமைகள்**

மார்த்தாண்டவர் மாவுக்கும் ராமன், பப்பு தம்பிகளுக்கும் நடந்த வாரிசுரிமைப் போரில் பூதப்பாண்டி பகுதியில் குடியேறிய பாண்டியர் குலத்தவரும் வலங்கை சான்றோர் குலத்தவரும் ராமன் தம்பி, பப்பு தம்பிக்கு ஆதரவாக நின்று படை நடத்தினர். பல போர்கள் செய்து மார்த்தாண்ட வர்மாவை அழிக்க முயன்றனர். ஆனால் மார்த்தாண்டவர்மா சூழ்ச்சி செய்து தம்பிமாரைக் கொன்றார். பின்னர் தம்பிமாருக்கு உதவிய பாண்டியர் குலத்தவர்களுக்கும் சோழர் குல வலங்கை சான்றோர்களுக்கும் சொல்லொண்ணா கொடுமைகள் செய்தான். இதனால் அங்கு வாழ விரும்பாத சோழர் குல புலிக்கொடியோன் வம்சாவழியினர் திருச்செந்தூர் பகுதியில் சென்று குடியேறினர். அங்கு அதிகாரம் செய்த முகமதியனை விரட்டியடித்தனர். மணக்காட்டில் மறவரை காவல் வைத்து ஆண்டனர் . பெரும் நிலவுடமையாளர் ஆயினர்.முருகன் கோயிலில் எந்நாளும் தீபம் ஏற்ற 20 குறுணிநஞ்சை எழுதி வைத்தனர். விசாகத்திற்கு தரிசிக்க வரும் பக்தர்கள் தங்கிட ஒரு மடமும் கட்டி வைத்தனர் என்று பல செய்திகளை ஓலைச்சுவடி குறிப்பிடுகிறது.

**முடிவுரை**

தமிழ்நாட்டில் மிக நீண்ட வரலாற்று பெருமைகளை கொண்ட சோழ மரபில் கல்வெட்டு ஆதாரங்கள் மூலமாக பல வரலாற்று உண்மைகள் வெளிவரப்பட்டிருக்கிறது. இலக்கிய ஆதாரங்களிலும் சோழர் பெருமைகள் பெருமளவு கூறப்பட்டுள்ளது சங்க காலத்தில் முக்காலச் சோழர் வரலாறு பற்றிய குறிப்புகளை நாம் காண முடிகிறது. அது போல சோழர் வரலாற்றில் ஓலைச்சுவடிகள் மூலமாக வரலாற்றை அறிய இந்த வலங்கை மாலை ஓலைச்சுவடிகள் பெரும் பங்களிப்பை வழங்க கூடியதாக இருக்கிறது. இதில் சோழ மன்னர்களின் அரசியல் நடந்த பல சம்பவங்களும் சோழ மன்னர்களின் மன உறவு சம்பந்தமான பல வரலாற்று உண்மைகளையும் அறிய முடிகிறது. மேலும் சோழர்களின் நிர்வாகம் போன்றவற்றையும் அறிய முடிகிறது சோழர் பண்பாட்டில் பழக்க வழக்கங்கள் எப்படி இருந்தது என்பதையும் இந்த ஓலைச்சுவடிகள் மூலமாக தெரிந்து கொள்ள முடிந்தாலும் சோழ மரபின் கடைசி காலகட்டத்தில் என்ன மாதிரியான சூழ்நிலை அமைந்திருந்தது என்பதை அறிந்து கொள்ள இந்த வலங்கைமாலை ஓலைச்சுவடிகள் உதவியாக இருந்திருக்கிறது. குறிப்பாக சோழ வம்சத்தின் கடைசியில் வீரசேகரன் ஆட்சி காலம் முடியும் வரை சோழர் வரலாறு தொடர்பான தெளிவான ஆதாரங்கள் நமக்கு கிடைக்கப் பெறுவதில்லை தெலுங்கு மன்னர்களும் பிற நாயக்க மன்னர்களும் பாளையக்காரர்களும் எழுச்சி அடைந்த பிறகு கூட சோழ வம்சம் தழைத்து இருந்திருக்கிறது சோழ வம்சத்தின் ஒரு சில மரபு வழி சார்ந்த வழித்தோன்றல்கள் இருந்ததையும் அறிந்து கொள்ள முடிகிறது. சிதம்பரத்திற்கு அருகில் உள்ள பிச்சாவரம் பகுதியில் இருக்கக்கூடிய ஜமீன்தார்கள் இன்றளவும் சோழ வம்சத்தை சார்ந்தவர்கள் என்றும் தங்களை குறிப்பிட்டுக்

*கொள்கிறார்கள். சோழ வம்சத்தின் வரலாற்றை நாம் அணுகி பார்க்கும்போது சோழ வம்சத்தில் சிதம்பரம் கோயிலில் இருக்கக்கூடிய ஓவியங்களும் அதற்கு சான்றுகளாக உள்ளன புலிக்கால் சித்தர் என்பவரின் ஆசி பெற்ற இரன்யவர்மன் என்ற ஒருவன்தான் சோழ வம்சத்தை நிறுவினான் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. அதற்குப் பிறகு மனுநீதிச் சோழன் போன்றவர்கள் சோழ வம்சத்தை ஆட்சி செய்ததையும் அவர்களுக்கு பிறகு சோழ வம்சத்தில் கரிகாலன் அதற்கு முன்பு அவனது தந்த இளஞ்சென்னி போன்றவர்கள் ஆட்சி செய்திருப்பதையும் பிறகு 600 வருடங்களுக்குப் பிறகு விஜயாலய சோழன் சோழ வம்சத்தை மீட்டு எடுத்தான் என்பதையும் அதற்குப் பிறகு இராஜராஜன்,இராஜேந்திரன் போன்ற பிற்கால சோழ மன்னர்கள் சோழ வம்சத்தை உச்சிக்கு கொண்டு சென்றதையும் அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் மூன்றாம் இராஜேந்திரனுக்கு பிறகு சோழ வரலாற்றை தெரிந்து கொள்ள இந்த ஓலைச்சுவடி பெரும் பங்களிப்பை கொடுக்கிறது.*

**ஆதாரங்கள்**


1. *மு.கோ. ராமன், தமிழ்ச் சுவடிப் பதிப்பு, சேகர் பதிப்பகம், பக்., 23-25.*
2. *இராமச்சந்திரன், சீ.(Irāmaccantiran, Cī.)(2004).உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.சென்னை*
3. *இலங்கை வலங்கை வரலாறு., தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் வரிசை எண் 106., டாக்டர் எஸ். சௌந்தரபாண் ரயான்*
4. *தினமலர்., சோழர் வரலாறு பேசும் ஓலைச்சுவடி கன்னியாகுமரியில் கண்டுபிடிப்பு.*
5. *தமிழ்ப் பொழில் (1935-1936) துணர்: 11 - மலர்: 4. இராவ்சாகிப் திரு.த.வே. உமாமகேசுவரம் பிள்ளை*


*********